# DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.136/2021 |
| Depostition of witness for | Prosecution wit. PW.1 |
| Name | பிரதாப் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 20-06-2022

முதல்விசாரணை

நான் கருங்குளம் கிளாக்குளத்தில் குடியிருந்து ஏசிமெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். எனக்கும் எதிரிகளுக்கும் கல்யாணம் சீக்கிரம் முடித்தது சம்மந்தமாக சிறு வயதிலேயே ஏன் சீக்கிரம் திருமணம் செய்கிறாய் என கேட்டது சம்மந்தமாக முன்பகை ஏற்பட்டது இது விளையாட்டாக பேசப்பட்டது. கடந்த 19.08.2021 ம்தேதி இரவு 10.30 மணிக்கு நான் எனது வீட்டு முன்பாக நின்று கொண்டிருந்த போது 1ம் எதிரி லெட்சுமணன் என்பவர் கெட்டவார்த்தையால் தேவடியா மகனே என்று அசிங்கமாக பேசி எனது இடது கன்னத்தில் கையைக் கொண்டு அடித்து விட்டு உடன் அவரது உறவுமுறையான ராமலிங்கம், லெட்சுமணலிங்கம், பெரியசாமி, லிங்கதுரை

ஆகியோர் வந்து அவர்கள் அனைவரும் சேர்ந்து என்னை கெட்டவார்த்தையால் தேவடியாமகனே என்று திட்டி கையில் வைத்திருந்த கம்பால் 3ம் எதிரியாகிய லிங்கதுரை என்பவர் எனது இடது கன்னத்தில் ஓங்கி அடித்தார். 2ம் எதிரி ராமலிங்கம் கம்பால் எனது நெற்றியில் அடித்து காயம் ஏற்படுத்தினார். 4ம் எதிரி பெரியசாமி என்பவர் எனது சட்டையை பிடித்து இழுத்து வெளியே கொண்டுவந்து விட்டார். அப்போது எனது பெற்றோர்கள் வந்து என்னை அடிப்பதை தடுத்தார்கள். காயம் அடைந்த என்னால் நிற்க முடியவில்லை. உடனே என்னை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு உள்நோயாளியாக சேர்த்து 15 நாட்கள் நான் சிகிச்சையில் இருந்தேன். சிகிச்சையில் இருந்த போது அங்கு வந்த பெண்காவலர் அங்கு வந்து நடந்த விவரத்தை நான் சொல்ல அவர்கள் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். சாட்சி எதிரிகள் தான் மேற்சொன்ன சம்பவத்தில் அடித்த நபர்கள் என்று திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.**

DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.136/2021 |
| Deposition of witness for | Prosecution wit. PW.2 |
| Name | முருகன் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 20-06-2022

<u>முதல்விசாரணை</u>

நான் கருங்குளம் கிளாக்குளத்தில் குடியிருந்து டெய்லராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். எனது மகனுக்கும் எதிரிகளுக்கும் முன்பகை இருந்து வந்தது. கொடை விழா நடந்த சமயத்தில் கடந்த 19.08.2021 ம்தேதி இரவு 10.30 மணிக்கு அ.சா.1 எனது வீட்டு முன்பாக நின்று கொண்டிருந்த போது எனது மனைவியும் அங்கிருந்தார். எதிரி லெட்சுமணன் மற்றும் ராமலிங்கம், அவர்களது அப்பா பெரியசாமி, லிங்கதுரை என்ற 3 ம் எதிரி ஆகியோர் எனது மகனை கம்பால் தலை மற்றும் நெற்றி உடல் முழுவதும் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். இதனால் எனது மகனுக்கு காயம் அதிகமாக கன்னத்தில் ஏற்பட்ட பின்னர் அவனால்

முடியவில்லை. வீட்டில் தூங்கி கொண்டிருந்த நான் சத்தம் கேட்டு எழுந்து சம்பவம் நடந்து முடிந்த பிறகு வந்து பார்த்து உடனே அ.சா.1 ஐ திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு உள்நோயாளியாக சேர்த்தேன். சிகிச்சையில் இருந்த போது அங்கு வந்த பெண்காவலர் அங்கு வந்து நடந்த விவரத்தை அ.சா.1 சொல்ல அவர்கள் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான் அது **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.**

DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.136/2021 |
| Deposition of witness for | Prosecution wit. PW.3 |
| Name | பார்வதி |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 20-06-2022

முதல்விசாரணை

நான் கருங்குளம் கிளாக்குளத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். அ.சா.ஆ.2 எனது கணவர் ஆவார். எதிரி லெட்சுமணனும் எனது மகனும் நண்பர்கள் தான். சின்ன வயதிலேயே ஏன் திருமணம் முடித்தாய் என்று கேட்டது சம்மந்தமாக எனது மகனுக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது. கடந்த 19.08.2021 ம்தேதி இரவு 10.30 மணிக்கு அ.சா.1 எனது வீட்டு முன்பாக நின்று கொண்டிருந்த போது எதிரி லெட்சுமணன் எனது மகனை அடித்து விட்டு சென்றார். பிறகு லெட்சுமணன் சென்று பெரியசாமி, ராமலிங்கம், லிங்கதுரை ஆகியோர் எனது மகனை கம்பால் தலை உடல் முழுவதும் அடித்து காயம்

ஏற்படுத்தினார்கள். நான் சத்தம் கேட்டு சென்று பார்த்த போது எனது மகனை அடித்த எதிரிகள் எனது மகனை பார்த்து தேவடியா மகனே உனக்கு சாவு என் கையில் தான் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள். உடனே அ.சா.1 ஐ திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு உள்நோயாளியாக சேர்த்தேன். சிகிச்சையில் இருந்த போது அங்கு வந்த பெண்காவலர் அங்கு வந்து நடந்த விவரத்தை அ.சா.1 சொல்ல அவர்கள் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.**

DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.136/2021 |
| Deposition of witness for | Prosecution wit. PW.4 |
| Name | பூமாதேவி |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 20-06-2022

முதல்விசாரணை

நான் மேலத்தெருவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது உறவினர் ஆவார். சம்பவம் குறித்து போலீசார் வரைந்த வரைபடத்தில் போலீசார் சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டார்கள். மகஜரில் நான் 2 வதாக கையொப்பம் செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியும். பார்வை மகஜர் **அ.சா.ஆ.3** ஆகும். அதில் நான் மற்றும் கலாச்செல்வி இருவரும் கையொப்பம் செய்தோம்.

**கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவித்தார்.**